ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# மானுடவியல் நோக்கில் ஆற்றுப்படை இலக்கியங்கள்

முனைவர் இரா.கலைச்செல்வி
தமிழ் உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி
இராசிபுரம் 637 401.

ஆய்வுச் சுருக்கம்

மனிதனைப் படிப்பதே மானுடவியல். மனித வாழ்வின் நிலைகளை எல்லாக் காலக்கட்டங்களிலும் இலக்கியங்கள் பிரதிபலித்துக் காட்டியுள்ளன. காட்டியுள்ளதோடு மட்டுமல்லாது வாழ்வியல் சிக்கல்களுக்கான தீர்வையும் அவை முன்வைத்துள்ளன. அத்தீர்வுகள் இன்றைய காலக்கட்டத்திற்கும் பொருந்துவனவாக அமையலாம். மனித வாழ்வியலில் எல்லாக் காலக் கட்டத்திலும் சிக்கலான வாழ்வியல் கூறுகளுள் ஒன்றாக இருப்பது பொருளாதாரம்தான். பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மனிதரையும் அவர்களின் வாழ்வியலையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. செல்வந்தரின் செல்வ நிலையும் ,கூடவே வறியவர்களின் வறுமை நிலையும் அக்காலந்தொட்டு இன்றுவரை வாழ்வில் பயணித்துக்கொண்டேதான் இருக்கிறது. ஏற்றத்தாழ்வுகள் எல்லாக்காலத்திலும் சமூகத்தில் இடம் பெற்றிருப்பினும் , வறுமை என்ற சிக்கலுக்கான தீர்வு காண பலரும் பல கருத்துக்களை அன்றுமுதல் இன்றுவரை முன்வைத்திருக்கின்றனர். புலமை மிக்கவர்களும்,அறிவு ஆற்றல் நிரம்பியவர்களும், கலைத்தொழிலில் வல்லவர்களும்கூடத் தம் வாழ்வில் வறுமை நிலையை அடைந்திருக்கின்றனர். அவர்களின் அந்நிலை போக்க வழி சொல்லும் இலக்கியமாகத் திகழ்ந்தவைதான் ஆற்றுப்படை இலக்கியங்கள். “யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்” என்ற திருமூலரின் உலகளாவிய மானிட நேய சிந்தனை ஆற்றுப்படை இலக்கியத்தில் பிரதிபலிப்பதைக் காணலாம். ‘நான்’ என்ற குறுகிய வட்டத்திற்குள் வாழும் சுயநலமிக்க மனித சமுதாயம் முன்னேற முடியாது. ‘நாம் ‘ என்ற பரந்த உள்ளத்தோடு ,தன்னலமற்ற எண்ணத்தோடு வாழும் மனித இனமே பண்பட்ட சமுதாயத்தின் வளர்ந்த இனமாக இருக்க முடியும். வறுமையில் வாழும் ஒருவனைக் கண்டு எள்ளி நகையாடாமல் இருப்பதும், அவனைப் புண்படுத்தாமல் இருப்பதும் குறைந்த பட்ச மானிடப்பண்பு. அவனுக்கு அவ்வறுமையிலிருந்து மீண்டுவர , அவனும் நம்மைப்போல உயர்வடைய வழிகாட்டுவது தலையாய மானிடப்பண்பு. மனிதனை மனிதனாக வாழச் செய்வது இப்பண்புதான். சங்க இலக்கியங்களுள் ஒன்றான ஆற்றுப்படை இலக்கியங்கள் இப்பண்பைத்தான் தலையாய பண்பாகக் கொண்டு மனித இனம் உயர்வடையும் வழியைக் காட்டிச் செல்கிறது. இல்லை என்று வருந்துபவனுக்கு ஈத்துவக்கும் உள்ளம் உள்ள ஒருவனைக் காட்டி எனக்கு வாழ்வு தந்தான் அவன்உனக்கும் தருவான் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி அவன் வாழ்வையும்ஒளிரச் செய்வதுதான் ஆற்றுப்படை இலக்கியங்களின் தலையாய நோக்கம். ஆக , மானுடவியல்பாரவையில் உன்னதமான இலக்கியங்களுள் ஒன்றாக ஆற்றுப்படை இலக்கியங்கள் திகழ்கின்றன. அவ்விலக்கியங்களுள் இடம் பெற்றுள்ள இறைநம்பிக்கை, கலைஞர்களின் வறுமை நிலை, விருந்தோம்பும் பண்பு , கொடைத்தன்மை ஆகிய கூறுகளை அடையாளப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தோன்றிய இலக்கியங்கள் அவ்வக்கால மக்களின் வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும் பிரதிபலித்துக்காட்டக் கூடியனவாய்

அமைந்துள்ளன. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் தொட்டு இன்று வரை மனித சமுதாய வரலாற்றில் மக்களின் வறுமைநிலை படம்பிடித்துக்காட்டப்பட்டுள்ளது. ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடு எல்லாக்காலக் கட்டத்திலும் மிகுந்துள்ளது. பணம் படைத்தவர்கள் அதிகாரவர்க்கத்தினராகவும், பணமில்லாதவர்கள் அடிமை வர்க்கத்தினராகவும் வாழ்ந்தனர். வாழ்கின்றனர். சங்க காலத்தில் வாழ்ந்த பாணர் , கூத்தர், பொருநர், விறலியர் போன்ற கலைஞர்களின் வாழ்வு பொருளாதாரத்தில் நலிவடைந்த நிலையிலேயே இருந்ததை சங்க இலக்கியங்கள் வழி உணர முடிகிறது.

> "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக்காட்சி உறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
> சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"[1]

என்று தொல்காப்பியர் குறிப்பிடும் ஆற்றுப்படை இலக்கணம் மானுடத்தின் மகத்துவத்தை உணர்த்தும் உன்னத வழியாகும். வறுமையின் பின்னணியைக் காட்டி அவ்வறுமையைப் போக்க வள்ளல்கள் இருக்கிறார்கள் என்று அவர்கள் இருப்பிடம் செல்லும் வழியையும் காட்டி அங்கு சென்றால் அவர்கள் எப்படி உபசரிப்பார்கள் என்ற விருந்தோம்பலையும் காட்டி சமுதாயம் நலம்பெற ஒருவருக்கொருவர் வழிகாட்டி வாழச்செய்யும் மகத்தான இலக்கியங்கள் ஆற்றுப்படை இலக்கியங்கள். அவ்விலக்கியங்களில் இடம் பெற்றுள்ள மானுடவியல் கூறுகளை இக்கட்டுரை வழி அறியலாம்.

### ஆய்வு அணுகுமுறை

சங்க இலக்கியங்களுள் ஒன்றான ஆற்றுப்படை இலக்கியங்களில் காணலாகும் மானுடவியல் கூறுகளை அடையாளப்படுத்தி விளக்க முற்படுவதால் விளக்கவியல் அணுகுமுறையும் ,ஆற்றுப்படை இலக்கியங்கள் உணர்த்தும் சமூகச் சூழலில் மன்னர்களுடைய கொடைப்பண்பு ,மக்களுடைய வாழ்க்கை முறை என மானுடவியல் கூறுகளை இனங் காண்பதால் சமூகவியல் அணுகுமுறையும் இவ்வாய்வில் பின்பற்றப்பட்டுள்ளன.

### மானுடவியல் விளக்கம்

ஆங்கிலத்தில் Anthropology என அழைக்கப்படும் மானிடவியல் என்ற சொல் 'Anthropos' 'Logos' என்ற கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. மானிடவியல், மனித இயல்புகள் என்ற இரண்டு சொற்களுக்கும் தொடர்புண்டு. மனிதனைப் பற்றி அறிய உதவும் ஒரு துறையே மானுடவியல். இது மனிதர்களது வரலாறு, உடலியல் கூறுகள், வாழ்வியல் பண்புகள் ஆகியவற்றை எடுத்துரைக்கிறது. மானுடவியலின் முக்கியப் பிரிவாகப் பண்பாட்டு மானுடவியல் கருதப்படுகிறது. "பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது."[2] என்று பக்தவத்சல பாரதி அவர்கள் பண்பாட்டு மானுடவியல் குறித்துக் கூறுகிறார். மனிதர்களின் வாழ்க்கை முறை காலத்திற்கேற்பவும், நாகரிக மாற்றத்திற்கேற்பவும் மாறுபாடு அடைகிறது. மனிதர்களின் வாழ்க்கையை ஒட்டியே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. "இலக்கியங்கள் அவ்வக்காலச் சமுதாயப் பண்பாடு (Social culture) நிலைகளை வெளிப்படுத்துவன. சமுதாயத்தின் இயல்புப் போக்கிற்குத் தக்க உருப்பெறுவதும் காலப்போக்கிற்குத் தக்க மாறுபடுவதும் இலக்கியத்தின் இயற்கைப் பண்பாகும்"[3] என்று காந்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போல மானுடவியல் நோக்கில் ஆற்றுப்படை இலக்கியங்களைக் காணலாம்.

### ஆற்றுப்படை நூல்கள்

'ஆறு' என்ற சொல்லுக்கு வழி என்று பொருள். ஆற்றுப்படுத்துதல் என்பது வழிப்படுத்துதல் ஆகும். வறுமையோடு இருப்பவனை வள்ளலிடம் வழிப்படுத்தி பெருஞ்செல்வம் பெறச் செய்வதே ஆற்றுப்படையின் நோக்கமாகும். பத்துப்பாட்டு நூல்களில் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை, முடத்தாமக்கண்ணியார் பாடிய பொருநராற்றுப்படை, நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படை, கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படை , பெருங்கௌசிகனார் பாடிய கூத்தராற்றுப்படை ஆகிய ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும்.

இறை நம்பிக்கை

மானுடவியலின் சாரமே ஏதோ ஒன்றைப் பற்றிக் கொண்டு செல்வதுதான். பயமும், கவலையும், துன்பமும் நிறைந்த வாழ்விற்கு ஒளியாகத் திகழ்வதுதான் இறை நம்பிக்கை. இது மனித வாழ்க்கையை உயிர்ப்புள்ளதாக்கி முழுமையடையச் செய்கிறது. மனித இனக்குழுவின் ஒட்டு மொத்தமான நம்பிக்கை, சடங்குகள், உணர்வுகள், எதிர்பார்ப்புகள், செயற்பாடுகள் முதலிய கூறுகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இறைவனை மையமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பே சமயமாகும்.இச் சமயம் மனிதனின் உணர்வு வெளிப்பாடாக வளர்ச்சி அடைகிறது. “சமையம் என்ற சொல் அண்மை என்பதிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். ‘சமை’ என்பதற்கு ஒழுங்குபடுத்து என்று பொருள் கொள்ளலாம். ஒழுங்குபடுத்தப்பட்டு நன்முறையில் வளர்ச்சியடைந்த நம்பிக்கையே சமயமாகும். சமையம் என்ற சொல்லே சமயம் என்றாயிற்று”[4] என்று தேவநேயப்பாவாணர் சமயம் குறித்துக் கூறுகிறார். பொருளுக்காக வாழ்வது மட்டும் வாழ்க்கை அல்ல. இறைவன் அருளைப் பெறுவதுதான் உண்மையான மனித வாழ்விற்கு அர்த்தமுள்ளதாகும் என்று திருமுருகாற்றுப்படை வழி நக்கீரர் உணர்த்துகிறார். முருகப் பெருமான் வீற்றிருக்கும் ஆறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை ஆகியவற்றின் சிறப்பைக் கூறி அப்படைவீடுகளில் வீற்றிருக்கும் முருகனை இடைவிடாமல் சிந்திக்கும்போது “அளியன் தானே முதுவாய் இரவலன்” என்று கூளியர் முருகனுக்குப் பரிந்துரைப்பர். அப்போதே முருகன் அருள் செய்வான் என்கிறார்.

“ சேவடி படருஞ் செம்மல் உள்ளமோடு
நலம்புரிக் கொள்கை புலம்புரிந்துரையும்
செலவு நீநயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே”[5]

இறைவனின் திருவடியை அடுய வேண்டும் என்ற உள்ளத்தோடு, ஆசையை நீக்கி, நன்மை செய்யும் குறிக்கோளுடன் மெய்யறிவை உணர்ந்து சென்றால் பிறவிதோறும் தொடர்ந்து உன் மனதில் நினைத்திருந்த வீடுபேறு என்ற எண்ணம் நிறைவேறும்படி அதனைப் பெறுவாய் என்று நக்கீரர் உணர்த்தும் திருமுருகாற்றுப்படை வழி மனித வாழ்வின் நோக்கமே இறைவனை அடைவதுதான் என்பது புலனாகிறது.

“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்”[6]

என்ற வள்ளுவரின் வாய்மொழியும் பிறவிக் கடலைக் கடக்க வேண்டும் என்றால் இறைவன் அடியைச் சேர வேண்டும் என்பதையே உணர்த்துகிறது.

கலைஞர்களின் வறுமை நிலை

மக்களுடைய வாழ்வியலில் ஏற்றத்தாழ்வுகள் எப்போதும் இருந்தே வருகின்றது. ஆற்றுப்படை இலக்கியங்களிலும் கூத்தர், பொருநர், பாணர், விறலியர் போன்ற கலைத்தொழிலில் வல்லவர்களும் வறுமை நிலையில் வாடியதைக்காண முடிகிறது. ‘பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்’ என்று ஔவையார் கூறுகிறார்.

“குடிப்பிறப்பழிக்கும், விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும், மாணெழில் சிதைக்கும்
பூணணி மாதரோடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி”[7]

என்று சாத்தனார் பசிப்பிணியின் கொடுமை உரைக்கிறார். பசி, பிணி, பகை இவை மூன்றும் இல்லாத நாடு சிறக்கும் என்கிறது வள்ளுவம். “தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்று பாடினார் மானுடம் பாடிய மகாகவி பாரதி. பசி என்ற ஒன்று பிணியாக இருக்கும் அவலநிலை ஆற்றுப்படை இலக்கியத்திலும் இடம் பெற்றுள்ளது.

“ஆடுபசி யுழந்த நின்இரும்பேரொக்கலொடு
நீடுபசி யொராஅல் வேண்டி னீடின்
எழுமதி”[8]

என்று பொருநனுடைய வறுமையைச் சுட்டிக் காட்டும்போது ‘கொல்கின்ற பசியால் வருத்தம் கொண்டிருக்கும் உன்னுடைய உறவினர்களுடன் தொடர்ந்து வந்த பசி உன்னை விட்டுச் செல்ல வேண்டும் என்றால் காலந்தாழ்த்தாமல் புறப்படுவாயாக’’ என்று குறிப்பிடுகிறார் முடத்தாமக் கண்ணியார். நத்தத்தனார் பாணனுடைய வறுமைநிலையைச் சிறுபாணாற்றுப்படையில் அப்படியே படம் பிடித்துக் காட்டியுள்ள விதம் சங்ககாலச் சமுதாயத்தில் பாணனுடைய வாழ்வியலைப் புலப்படுத்துகிறது.

“திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்”[9]

என்று வறுமையில் வாழ்பவர் வீடு இருக்கும நிலை இப்படிச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இன்னமும் கண்ணைத்திறக்காத தன் குட்டிகளுக்குக் கொடுக்கப் பாலில்லாத நிலையில் பசியால் வருந்தும் தாய் நாய் தன் குட்டிகளைக் குரைக்கிறது. சமையல் செய்யும் இடத்தில் கட்டிய கயிறுகள் இற்று கூரை சரிந்து வீழ்ந்த பழமையான சுவரில் கரையான்கள்அரித்த இடத்தில் காளான்கள் பூத்துக்கிடந்தன. பாணனுடைய மனைவி கிள்ளிக்கொண்டு வந்த குப்பைக்கீரையை உப்பில்லாமல் சமைத்து அதை உண்ணும் போது

“மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலோ டொருங்குடன் மிசையும்”[10]

பிறர் காண நேர்ந்தால் அவர்கள் கூறும் சொற்களுக்கு வெட்கப்பட்டு வாசற்கதவை அடைத்துக் கொண்டு தங்கள் சுற்றத்தோடு உணவு உண்டதாகக் கூறும் வரிகள் வறுமையின் கொடுமையை மட்டுமல்ல. மானுடத்தின் உயர்ந்த பண்பையும் பறை சாற்றுகிறது. தன் வறுமையைப் பிறர் காண நேர்ந்தால் அஞ்சுதல், வறுமையிலும் கிடைத்ததைச் சுற்றத்தோடு பகிர்ந்துண்ணுதல் போன்ற மானுடவியல் பண்புகளை அடையாளம் காண முடிகிறது.

பெரும்பாணாற்றுப்படையில் பாணனுடைய வறுமை நிலை உரைக்கும்போது உருத்திரங்கண்ணனார்

“பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!”[11]

என்கிறார். பாணன் பழுத்த மரம் தேடும் பறவை போலப் பல இடம் சென்றும் தன் கல்வியால் பயனின்றி அதை வெறுத்துரைக்கும் மெலிந்த தோற்றத்தை உடையவனாய் இருக்கிறான் என்று கூறியிருப்பது இன்றும் படித்த இளைஞர்கள் தான் கற்ற கல்வியால் பயனின்றி அதை வெறுத்துரைக்கும் நிலையிலேயே உள்ளனர் என்ற உண்மையை உணர்த்துகிறது.

## விருந்தோம்பும் பண்பு

அரிய மானுடப்பிறவியின் சிறப்பான குணங்களுள் ஒன்று விருந்தோம்புதல் ஆகும்.

“செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு”[12]

என்று வள்ளுவர் விருந்தோம்பலின் உயர்வைக் காட்டியுள்ளார். பண்டைத்தமிழர் விருந்தோம்பலைத் தம் வாழ்வின் உயரிய பண்பாகக் கருதினர். விருந்து என்னும் சொல்லுக்கு புதுமை என்னும் பொருளுண்டு. புதியவராக வீட்டிற்கு வருவோர் விருந்தினர் எனப்பட்டனர். கணவனும், மனைவியுமாகச் சேர்ந்து வாழும் இல்லற வாழ்வில் விருந்துக்கு முதன்மையான இடம் தந்தனர்.ஆகவேதான் மானுடவியலில் விருந்தோம்பும் பண்பு தலைமைக் குணம் பெற்றது.

“விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது”[13]

என்று குறிஞ்சிப்பாட்டுத் தலைவன் கூறும் கூற்று விருந்தினர் உண்டது போக மீதி இருக்கும் உணவைத் தலைவியோடு சேர்ந்து தான் உண்டு வாழும் வாழ்க்கையே உயர்வானது என்பதை உணர்த்துகிறது.

முடத்தாமக் கண்ணியார் பொருநராற்றுப்படையில் கரிகால் வளவனின. விருந்தோம்பும் பண்பைக் கூறும்போது

“கண்ணிற் காண நண்ணுவழி இரீஇப்
பருகு வன்ன வருகா நோக்கமோடு

உருகு பவைபோ லென்பு குளிர் கொளீஇ''[14]

இனிமையான மொழிகளைப் பேசிப் பக்கத்தில் அமர வைத்துக் கண்களால் பருகி விடுவது போல் அருள் உணர்வுடன் பார்த்து அன்பு மனத்தினை உருகச் செய்பவன் என்று கூறும் கூற்றில்

''மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து''[15]

என்ற வள்ளுவரின் வாய்மொழியும் புலனாகிறது நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையில் வழிநடையாக வரும் மக்களுக்கு அந்தந்த ஊரில் வாழும் மக்கள் எவ்வாறெல்லாம் விருந்து உபசரிப்பர் என்பதையும் கூறியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக நல்லியக்கோடனின் விருந்தோம்பலைக் கூறும்போது

''வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
இளங்கீரன் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தானின்றூட்டி''[16]

கோள்கள் சுற்றி இருக்க சூரியனின் ஒளியைத் தோற்கடிக்கும் பொற்கலத்தில் இரவலன் விரும்பி உண்ணும் உணவின் சுவை அறிந்து விருப்பத்தோடு அவர்கள் அருகில் நின்று உண்ணச் செய்வான் என்கிறார். விருந்தோம்பலின் உயர்வை வேறெப்படி கூற இயலும் ?

பெரும்பாணாற்றுப்படையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் உணவளிக்கும் சிறப்பைக்கூறும் போது

''தெய்வ மடையில் தேக்கிலைக் குவைஇறும்
பைதீர்க் கடும்பொடு பதமிகப் பெருகுவிர்''[17]

தெய்வத்திற்குப் பலி கொடுப்பது போலத் தேக்கு இலையில்உணவினை இடுவார்கள் என்கிறார்.

விருந்தோம்புதல் என்பது வெறுமே உணவிடுதல் மட்டுமன்று. அது அகமும் ,முகமும் மலர விருந்தினரைப் பேணுதல் என்பதும் ஆகும். சாதாரண மனிதராக இருந்தாலும் , அரசராக இருந்தாலும் விருந்தினரைப் பேணும் முறையில் மாறுபாடு இல்லை என்ற மானுடவியல் பண்பை இவ்வாற்றுப்படை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

கொடைத்தன்மை

பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் புறத்திணையியலில் 'கொற்றவள்ளை' என்ற ஒரு திணையின் துறையாக ''கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தலும்''[18] என்று குறிப்பிடுகிறது. பிறருக்குக் கொடுப்பவர்களை உயர்த்திக் கூறுதலும் , கொடுக்காதவர்களைப் பழித்துக் கூறுவதும் மானிடப் பண்பு.

''செல்வத்தின் பயன் ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே''[19]

என்று அறம் போதிக்கிறது புறநானூறு. கொடைத்தன்மையும் , குன்றாத புகழும் தவிர மானிட வாழ்க்கைக்கு சிறப்பைத் தருவது எதுவும் இல்லை.

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''[20]

என்கிறார் வள்ளுவர். மானுடவியலின் சிறந்த பண்பான கொடைத்தன்மை குறித்து ஆற்றுப்படை இலக்கியங்கள் அதிக அளவில் எடுத்தியம்பியுள்ளன.

''துடியடியன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையின் தரத்தர யானும்
என்னறி யளவையின் வேண்டுவ முகந்து கொண்டு
இன்மை தீர வந்தனென்''[21]

என்று முடத்தாமக்கண்ணியார் வள்ளலின் கொடைத்தன்மை குறித்துக் கூறுகிறார். யானைக் கன்றுகளுடன் பெண்யானைகளையும் , ஆண் யானைகளையும் நீங்கள் விரும்பும் அணிகலன்களுடன் பெற்றுக் கொள்வீர்களாக என்று தான் அறிந்திருக்கின்ற அளவில் கொடுத்தான் என்று கொடைத்தன்மை பற்றிக் கூறும்போது கிள்ளிக் கொடுப்பதல்ல கொடை அள்ளிக் கொடுப்பதுதான் கொடை என்பது புலனாகிறது.

நல்லியக்கோடனின் கொடைத்தன்மையை நத்தத்தனார் கூறும்போது படைத்தலைவர் கொண்டு வந்த பொருட்குவியல்களுடன் குளிர்காலத்தில் வானத்தில் ஒளி வீசும் நிலவுபோலக் காணப்படும் சக்கரத்துடன் சாதிலிங்கம் கொண்டு நிறமூட்டப்பட்ட போர்வையுடைய யானையும், நல்ல தேரையும் எருதுகளையும் பாகனுடன் சேர்த்து யானை, குதிரை,அணிகலன்கள் ஆகியவற்றுடன் பிற பரிசுகளையும் வழங்கி 'அன்றே செல்க' என்று அனுப்பி வைப்பான் என்கிறார்.

பரிசு தேடி வரும் இரவலர்களைக் காக்க வைப்பது என்பது மானிடப் பண்பிற்குச் சிறப்பாகாது. அவர்களுக்குத் தேவையானதை அப்பொழுதே வழங்கி விட வேண்டும் என்ற எண்ணத்தோடு 'அன்றே விடுக்கும் அவன் பரிசில்' என்று கூறி மானுடத்தின் உச்சத்தைக் காட்டுகிறார்.நத்தத்தனாரைப் போலவே உருத்திரங்கண்ணனாரும் இளந்திரையனின் கொடைத்தன்மை பற்றிக் கூறி குதிரைகள் பூட்டிய பொன்னால் செய்த தேருடன் பிற பரிசுகளையும் தந்து அன்றே விடுக்கும் அவன் பரிசில் என்கிறார். பெருங்கௌசிகனாரும் கூத்தராற்றுப்படையில் நன்னனின் கொடைத்தன்மையை மழைபோல் கொடைத்தன்மையோடு பரிசு வழங்கி முதல்நாளே அனுப்பி வைப்பான் என்கிறார்.

முடிவுரை

மானுடவியல் கூறுகளுள் ஒன்றான இறைநம்பிக்கை ஆசையை ஒழித்து நன்மை செய்யும் மெய்யறிவோடு வாழக்கூடிய ஒருவன் பல பிறவிகளிலும் இறைவனை அடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்ந்தால் மட்டுமே வீடுபேறு கிட்டும் என்ற உண்மையை உணர்த்துகிறது.

கலைஞர்களின் வாழ்வில் வறுமைநிலை இருப்பினும் அந்நிலையில் அவர்கள் செம்மையாக வாழ்ந்த வாழ்க்கையைக் காண முடிகிறது. ஆடுபசி, நீடுபசி, அழிபசி என்று பசிக்கொடுமை பலவிதத்தில் கூறப்பட்டுள்ளது. பழுமரம் தேடும் பறவை போல கற்றோர் பல இடம்தேடிச் சென்றாலும் அவர்கள் புலமை மதிக்கப்படாமலேயே இருந்தது. இன்றைய சமுதாயத்திலும் இத்தகைய வறுமைநிலை இன்றும் மாறாமல் அப்படியே இருப்பதைக் காண முடிகிறது.

மானுடவியலின் உயர்த்த பண்பான விருந்தோம்பும் பண்பு ஆற்றுப்படை இலக்கியங்களில் உயர்வாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. எதிர்வந்து வரவேற்பதும், அன்போடு நோக்குவதும், உடனின்று பரிமாறுவதும் வள்ளலுடைய விருந்தோம்பும் பண்பாகவும், எந்த ஊரில் வாழ்ந்தாலும் தான் உண்பதைஇல்லம் தேடிவரும் புதியவர்க்கு அளிக்கும் விருந்தோம்பல் மக்களுடைய பண்பாகவும் ஆற்றுப்படை இலக்கியங்கள் காட்டுகின்றன.

செல்வம் பெற்றவர்கள் பிறருக்கு உதவுதல் என்ற ஈகைப்பண்பு மானுடவியலின் சிறப்பான பண்பாகும். ஆற்றுப்படை இலக்கியங்கள் அவ்வீகைப் பண்பை முதன்மைப்படுத்தியுள்ளன. இரவலர்க்கு ஈதல் என்பதே மானிட தருமம். . அவற்றுள்ளும் ஆற்றுப்படைஇலக்கியம் காட்டும் மானிடம் இரப்பவனுக்கு உள்ளம் உவந்து கொடுப்பதோடு மட்டுமன்றி அவன் வந்த அன்றே கொடுத்து விட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. பல நாட்கள் பரிசை எதிர்பார்த்துக் காத்திருப்பவனின் மனம் பரிசைக் கண்ட உடனே மகிழ்ச்சி அடையும். அந்த மகிழ்ச்சியை அவனுக்குத் தந்து மகிழ்வதே சிறந்த தருமமாகும். ஆற்றுப்படை இலக்கியங்கள் காட்டும் மனிதனது வாழ்வியல் பண்புகள் எல்லாக் காலத்திற்கும் உரிய உயரிய பண்புகளாகும். இப் பண்புகள்தான் மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வைக்கும் என்பது திண்ணம்.

பார்வை நூல்கள்


1. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூ.88
2. பக்தவச்சலபாரதி , பண்பாட்டு மானிடவியல், ப.11
3. க.காந்தி ,தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் ,ப.11
4. ஞா. தேவநேயப்பாவாணர், பண்டைத்தமிழ் நாகரிகமும் பண்பாடும்,ப.81
5. நக்கீரர், திருமுருகாற்றுப்படை,வரிகள் 62-66
6. திருவள்ளுவர், திருக்குறள், கடவுள் வாழ்த்து, குறள்10
7. சீத்தலைச் சாத்தனார் ,மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை வரிகள் 76-80

8. முடத்தாமக்கண்ணியார், பொருநராற்றுப்படை ,வரிகள் 61-62
9. நத்தத்தனார், சிறுபாணாற்றுப்படை, வரிகள் 130-132
10. மேலது., வரிகள் 138-139
11. உருத்திரங்கண்ணனார், பெரும்பாணாற்றுப்படை , வரிகள் 20-22
12. திருவள்ளுவர், திருக்குறள், இல்லறவியல், குறள் 86
13. கபிலர், குறிஞ்சிப்பாட்டு, வரிகள் 206-207
14. முடத்தாமக்கண்ணியார், பொருநராற்றுப்படை, வரிகள் 20-22
15. திருவள்ளுவர், திருக்குறள், இல்லறவியல், குறள் 90
16. நத்தத்தனார், சிறுபாணாற்றுப்படை, வரிகள் 242-245
17. உருத்திரங்கண்ணனார், பெரும்பாணாற்றுப்படை, வரிகள் 104-105
18. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூ.87
19. நக்கீரனார், புறநானூறு, பாடல் எண் 189
20. திருவள்ளுவர், திருக்குறள், புகழ் 231
21. முடத்தாமக்கண்ணியார், பொருநராற்றுப்படை, வரிகள் 125-129

********* ********* ********** ********* ********* ********** ********** **********